RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt20418

OPEN ACCESS

# கொங்கு நாட்டு சமய நிலை

## க. திவ்யா [அ, *], அர. ஜோதிமணி [அ]

[அ] தமிழ்த்துறை, சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு - 638004

# Religious Status of Kongu Region

## G. Dhivya [a, *], R. Jothimani [a]

[a] Department of Tamil, Chikkaiah Naicker College, Erode – 638004, Tamil Nadu, India

* Corresponding Author: gdhivya.erd@gmail.com

Received : 03-07-2020
Accepted : 08-09-2020

### ABSTRACT

Throughout all periods, religions have thrived in political support. The Kongu region has also been subjected to such political religious influences. To understand the religious history of Kongu, many historical religious symbols such as temples, sculptures, inscriptions, religious texts, literary grammar books, epigraphs, and various historical artifacts found in excavations significantly aid. Like other parts of Tamil Nadu, various religions have flourished in the Kongu region as well. The six-fold worship methods existed in Kongu. Not only that, but worship of ancestral deities, minor deities, village deities, and guardian deities has also been prominent. Furthermore, researchers have explained that due to political changes, other religious paths like Jainism, Buddhism, Islam, and Christianity have spread in the Kongu region.

**Keywords:** Worship, Political Changes, Kongu Region, Religious Influences

## முன்னுரை

எல்லா காலகட்டங்களிலும் அரசியல் ஆதரவோடுதான் சமயங்களும் செல்வாக்கு பெற்று திகழ்கின்றன. கொங்கு நாடும் அத்தகைய அரசியல் சமய தாக்குரவிற்கு ஆட்பட்டதே ஆகும். கொங்கு நாட்டின் சமய வரலாற்றை அறிவதற்கு இங்குள்ள கோயில்கள், சிற்பங்கள், கல்வெட்டுக்கள், தலபுராணங்கள, இலக்கிய இலக்கண நூல்கள், செப்பேடுகள், அகழ்வாய்வுகளில் கிடைக்கப்பட்டுள்ள பல்வேறு வரலாற்று சமய சின்னங்கள், வரலாற்று அறிஞர்களின் ஆய்வு நூல்கள் முதலியன பெரிதும் துணை செய்கின்றன. தமிழகத்தின் ஏனைய பகுதிகளைப் போலவே கொங்கு நாட்டிலும் பல்வேறு சமயங்கள் செழித்து வளர்ந்துள்ளன. அறுசமைய வழிபாட்டு முறைகளும் கொங்குநாட்டில் இருந்துள்ளன. அதுமட்டுமல்லாமல் குலதெய்வ வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு, கிராம தெய்வ வழிபாடு, காவல் தெய்வ வழிபாடு போன்றவையும் சிறப்புற்று இருந்திருக்கின்றன. மேலும் அரசியல் மாற்றங்களினால் சமணம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்துவம் போன்ற பிற சமய நெறிகளும் கொங்கு நாட்டில் பரவி இருந்ததை ஆய்வாளர்கள் விளக்கி உரைத்திருக்கின்றனர்.

## கொங்கு நாட்டில் சமணமும் பௌத்தமும்

தமிழகத்தை பொறுத்தவரையில் சமணமும் பௌத்தமும் சங்க காலத்தில் இருந்தே பரவி இருந்ததற்கான சான்றுகள் சங்க பாடல்களிலும் சங்க புலவர்கள் பற்றிய வரலாற்று குறிப்புகளிலும் கிடைக்கின்றன. இவ்வாறாக தமிழகத்தில் பரவி இருந்த சமணமும் பௌத்தமும் பக்தி இலக்கிய காலமான கிபி ஆறு ஏழாம் நூற்றாண்டு வரையில் மிகுந்த செல்வாக்குடன் காணப்பட்டதை தமிழக சமய வரலாற்று ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். பின்பு தமிழகத்தில் கிளர்ந்தெழுந்த பக்தி இயக்கத்தின் எழுச்சியினாலும் பின்வந்த பல்வேறு அரசியல் மாற்றங்களினாலும் சமணமும் பௌத்தமும் தம் செல்வாக்கை இழந்து காணப்பட்டன. எனினும் அவை கிபி 16 - 17 ஆம் நூற்றாண்டு வரையிலும் தமிழகத்தில் பல பகுதிகளில் தம் அடையாளங்களை தக்க வைத்துக் கொண்டிருக்கின்றன. சமண பௌத்த இலக்கியங்களும் இலக்கண நூல்களும், கல்வெட்டு செய்திகளும, கோயில்களும், மடங்களும் இதற்குச் சான்று பகர்கின்றன.

## கொங்கு நாடும் சமணமும்

கர்நாடக மாநிலத்தில் உள்ள சரவணபெலகுளா எனும் ஊர் கிபி இரண்டு மூன்றாம் நூற்றாண்டில் சமணர்களுக்கு தலைநகரமாக விளங்கியது. அங்கிருந்துதான் சமணத் துறவிகள் தமிழகத்தில் நுழைந்து சமணத்தை பரப்பினர் என்பர. அவ்வாறு கர்நாடக மாநிலம் மைசூரில் இருந்து தமிழகத்தில் நுழைய சிறந்த வழியாக கொங்குநாடு அமைந்திருந்தது. எனவே சமணத் துறவிகள் கொங்கு நாட்டு மலைகளில் குகைகளையும் படுக்கைகளையும் அமைத்துக் கொண்டனர. இதற்குச் சான்றாக புகழியூர், அரசலூர் முதலிய இடங்கள் இன்றும் விளங்குகின்றன. அரசலூர் மலையில் சமணர்களின் புகழ்பெற்ற இசை கல்வெட்டுகள் இன்றும் அழியாமல் உயிர்போடு இருப்பதை காணலாம். அதேபோல இங்குள்ள விஜயமங்கலம் சமணர்களின் மிகப்பெரிய சமயத்தலமாகும். இப்பகுதியில் சந்திர பிரபா என்ற சமண தீர்த்தங்கரர் கோயில் ஒன்று உள்ளது. தற்காலத்தில் அமரேஸ்வரர் கோயில் என அழைக்கப்படுகின்றது. மேலும், ஆனைமலையின் அடிவாரத்தில் அமைந்திருக்கின்ற திருமூர்த்தி மலை சமண சிற்பங்களோடு காணப்படுகின்றது. ஒன்பதாம் தீர்த்தங்கரர்hன புஷ்பநந்தர் கோயில் ஒன்று திங்களூரில் காணப்படுகின்றது. அதேபோல தர்மபுரி மல்லி நாதர் ஆலயம் அய்யம்பாளையம் முதலிய ஊர்கள் சமண வழிபாட்டிடங்களாக இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன.

அது மட்டுமல்லாமல் பெருங்கதை, நன்னூல், சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரை, கொங்கு மண்டல சதகம் முதலிய புகழ்பெற்ற சமண இலக்கியங்கள் இங்கு இருக்கின்றன. பெருந்கதை இயற்றிய கொங்கு வேளீர் விஜயமங்கலத்தில் வாழ்ந்த சமண சமயத்தை சேர்ந்த குறுநில மன்னர் ஆவார். நன்னூல் எனும் தமிழ் இலக்கண நூலை எழுதிய பவணந்தி முனிவர் கொங்கு நாட்டு சனகாபுரத்தில் வாழ்ந்தவர். பவணந்தி எனும் பெயர் சமண சமயத்தார்க்கு உரியது தேவாரத்தில் திருஞானசம்பந்தர் சமணர் பெயர்களை கனக நந்தி, புஷ்ப நந்தி, பவணந்தி என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் நேமி நாதம், வச்ச நந்தி மாலை ஆகிய நூல்களை இயற்றிய குணவீர பண்டிதர் சமண சமயத்தை சார்ந்த கொங்கு நாட்டு கலந்தை எனும் ஊரில் வாழ்ந்த புலவர் ஆவார்.

சிலப்பதிகாரத்திற்கு உரை செய்த அடியார்க்கு நல்லார், கொங்கு மண்டல சதக ஆசிரியர் கார்மேக கவிஞர் போன்றோர் கொங்கு நாட்டை சார்ந்து சமண புலவர்கள் ஆவர்.

## கொங்கு நாட்டில் பௌத்தம்

ஏனைய சமயங்கள் கொங்கு நாட்டில் பெற்ற செல்வாக்கை போல பௌத்த மதம் பெறவில்லை எனலாம். எனினும் கலப்பிரர் காலத்தில் ஓரளவு பௌத்தம் கொங்கு நாட்டில் பரவி இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. சேலம் மாவட்டத்தில் தியாகனூர் எனும் பகுதியில் கிடைக்கப் பெற்ற புத்தர் சிலைகள் அதற்கு சான்றாக அமைகின்றன. கொங்கு மக்கள் அச்சிலையை கொங்கு சித்தர் என்ற பெயரில் வழிபட்டு வருகின்றனர்.

## கொங்கு நாட்டில் சைவம்

சமணம் பௌத்தம் போன்ற சமயங்கள் போல் அல்லாது சைவ மதம் தொன்று தொட்டு தமிழகத்தில் வழங்கப்பட்டு வருகின்ற பழமையான சமயமாகும். சங்க இலக்கியங்களில் சிவ வழிபாட்டை பற்றி குறிப்புகள் காணப்படாவிட்டாலும் சிவனைப் பற்றிய புராணக் குறிப்புகள் ஆங்காங்கு தென்படுகின்றன.

“நீளமணி மிடற்று ஒருவன் போல மண்ணுக பெரும நியே” (புலியூர்க் கேசிகன்,2010)

என அவ்வையார் அதியமானை வாழ்த்துகின்றார். கொங்கு நாட்டிலும் சைவம் பரவி இருந்தது. தேவார ஆசிரியர்களின் வருகையால் சைவம் கொங்கு நாட்டில் சிறப்புற்று திகழ்ந்தது என்பதை அறிய முடிகின்றது. ஞானசம்பந்தர் கொடுமுடி, பவானி, குறக்குத்தளி, அவிநாசி, திருமுருகன்பூண்டி, திருச்செங்கோடு, பேரூர் ஆகிய திருத்தலங்களை தாம் இயற்றிய பதிகங்களில் பாடியுள்ளார்.

திருநாவுக்கரசர் திரு கொடுமுடியை பற்றி ஐந்து குறுந்தொகை பாடல்களை பாடியுள்ளார். கிபி எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர் கொடுமுடி, அவிநாசி, திருமுருகன்பூண்டி, வெஞ்சமாகூடல் ஆகிய திருத்தலங்களை போற்றி பதிகங்கள் பாடியுள்ளார். அதேபோல தேவாரத்தில் இடம் பெற்ற கொங்கு ஏழு திருத்தல பதிகங்கள, ஐயடிகள் காடவர்க்கோன் பாடிய சேத்திர வெண்பா, திருவுசைப்பா, திருமூலரின் திருமந்திரம், சேக்கிழாரின் பெரியபுராணம் முதலியன கொங்கில் சைவ சமயம் பெற்றிருந்த செல்வாக்கை அறிய உதவும் வரலாற்று ஆவணமாக திகழ்கின்றன.

## இஸ்லாமும் கிறித்துவமும்

கிபி 18 - 19 ஆம் நூற்றாண்டுகளில் இஸ்லாமிய மதம் இங்கு பரவியது. ஹைதர் அலி, திப்புசுல்தான் காலத்தில் கொங்கு நாட்டில் பல சைவ, வைணவ கோயில்கள் அழிக்கப்பட்டன. விஜயநகர பேரரசின் இரண்டாம் கம்பனர் காலத்தில் ஏற்பட்ட மாலிகா போர் படையெடுப்பின் விளைவாக பல இந்து கோயில்கள் அழிக்கப்பட்டு மசூதிகள் ஏற்பட்டன. இக்காலகட்டத்தில் கொங்கு நாட்டின் பல மசூதிகள் அமைக்கப்பட்டன. அதேபோல கிபி 16ஆம் நூற்றாண்டில் இருந்து கிறிஸ்து மதம் பரவத் தொடங்குகின்றது. போர்ச்சுகீசிய வேத போதகர்கள், லூர்த்து சபை குருக்கள் போன்றவர்களால் கொங்கு நாட்டில் கிறிஸ்துவம் பரவியது என்பார் பூங்குன்றன். (ஆர் பூங்குன்றன், 2005)

கொங்கு நாட்டு கருமத்தம்பட்டியில் ஜெபமாலை அன்னை ஆலயம், சத்தியமங்கலத்தில் அருளானந்தர் ஆலயம், புளியகுளத்தில் அந்தோனியார் ஆலயம, துடியலூரில் யூதாசு தேயூர் ஆலயம், அவிநாசியில் தோமையார் ஆலயம் ஆகிய ஆலயங்கள் கிறிஸ்தவர்கள் சிறப்பு வாய்ந்த வழிபாட்டுத்தளங்களாக இருந்திருக்கின்றன.

## கொங்கு நாட்டில் சிறு தெய்வ வழிபாடு

கொங்கு நாட்டில் தொன்று தொட்டு சிறு தெய்வ வழிபாடுகளும் சிறப்பு பெற்று இருந்திருக்கின்றன. கொங்கு நாட்டில் பல்வேறு இன குழுக்கள் வாழ்ந்திருக்கின்றன. இன்றும் தோடர், மலையாளிகள், இருளர்கள் போன்ற பழங்குடிகள் கொங்கு மலைப் பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர. அவர்கள் பல்வேறு விதமான சிறு தெய்வ வழிபாடுகளை உடையவர்களாக தொன்றுதொட்டு வாழ்ந்து வந்து கொண்டிருக்க கூடிய இனக்குழு மரபினர் ஆவர். அதேபோல கொங்கு பகுதியில் பல்வேறு மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தாம் தம் குல மரபிற்கு ஏற்ப சிறு தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர்.

சமய அடிப்படையில் வழிபடு சமயங்களை இரு நிலைகளில் ஆய்வாளர்கள் பகுத்துக் காட்டுவர்.

1) ஆன்மா வழிபாடு

2) ஆவி வழிபாடு

ஆன்மா பற்றிய சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட சமய நெறிகளை பெருந்தெய்வ வழிபாட்டு நெறி என்றும், ஆவி பற்றிய நம்பிக்கையுடைய தெய்வ நெறியை சிறுதெய்வ வழிபாட்டு நெறி என்றும் மில்டன் சிங்கர் எனும் ஆய்வாளர் பகுத்துக் கூறுவார், அதனடிப்படையில் பெருந்தெய்வ வழிபாடு மட்டுமல்லாமல், சிறு தெய்வ வழிபாடுகளும் கொங்கு நாட்டில் செழிப்புற்று காணப்பட்டன. ஆய்வாளர் சி கதிர்வேல் அவர்கள் கொங்கு நாட்டில் வழிபாட்டு நிலையிலிருந்து சிறு தெய்வங்களை கீழ்கண்டவாறு பகுத்துக் கூறுகின்றார்,

கொங்கு நாட்டு சிறு தெய்வங்களை பொதுநிலையில் உள்ள உள்ளவை, சிறப்பு நிலையில் (குறிப்பிட்டவர்களால் குறிப்பிட்ட சாதியாரிடம் மட்டும் உள்ளவை) என இரு நிலைகளில் பகுத்து காணலாம. பொதுநிலையில் உள்ள சிறு தெய்வங்களாக மாரியம்மன், முத்தாரம்மன, காளியம்மன். பத்ரகாளி, துர்காளி, மாகாளி, எல்லைப்பிடாரி, எல்லை மாகாளி, திரௌபதி, போன்ற தெய்வங்களை கூறலாம். கருப்பண்ணன், மதுரை வீரன், அரசப்பன், சவுண்டம்மன், பெரியாண்டிச்சி ஆகிய தெய்வங்கள் குறிப்பிட்ட சாதியினர் வழிபடும் நிலையில் இருப்பவை என்று குறிப்பிடுகின்றார். கொங்கு நாட்டில் சிறு தெய்வ வழிபாடுகள் சிறப்பு இருப்பதை காட்டுவதாக இக்கருத்து அமைகிறது. (சி. கதிர்வேல், 1988)

## கொங்கு நாட்டில் வைணவம்

பல்லவ மன்னர்கள் காலத்திலும் கங்க மன்னர்கள் காலத்திலும் கொங்கு நாட்டில் வைணவம் சிறப்புற்றிருக்கிறது. கங்க மன்னர்களில் விஷ்ணுகோபன் சிறந்த விஷ்ணு

பக்தனாக இருந்திருக்கின்றான். இவன் பல விஷ்ணு கோயில்களை கொங்கு நாட்டில் கட்டி இருக்கின்றான். (மா. இராமச்சந்திரன் செட்டியார், 1954)

வைணவ ஆழ்வார்களில் ஒருவரான குலசேகர ஆழ்வார் தன்னை கொங்கர்கோன் என்று கூறிக் கொள்கின்றார். மேலும் இவரது பாட்டங்களில் கொல்லி காவலன், கூடல் நாயகன், கோழிக்கோன் என்பவை குறிப்பிடப்படுகின்றன. இவற்றைக் கொண்டு இவர்தம் கொங்கு நாட்டு சார்பை அறியலாம். வைணவ ஆழ்வார் ஆன பெரிய ஆழ்வார் கண்ணனை குழந்தையாக பாவித்து பிள்ளைத்தமிழ் பாடும் இடத்து,

"கொங்கும் குழந்தையும் கோட்டியூரும் எங்கும் திரிந்து விளையாடும் என் மகன்" (சே.கிருஷ்ணமாச்சாரியார், 1988)

என்று கூறிக் கொள்கிறார். பராந்தகன் பேரூரில் திருமாலுக்கு கோயில் எடுத்தான் என வேள்விக்குடி செப்பேடு விவரிக்கின்றது. ஆனால் அக்கோயில் தற்போது பேரூரில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் கொங்கில் வைணவம் பரவி இருந்ததை ஆய்வாளர் த இரமணி என்பார், வேதாந்த தேசிகர் என்னும் ஆசாரியர் கொங்கு நாட்டில் இருந்து பரமத பங்கம் என்ற நூல் குறிப்பு உள்ளது. கொங்குநாட்டில் மாரி குறைந்து பஞ்சம் ஏற்பட்டது. அத்தருணத்தில் கொள்ளைக்களம் என்ற அக்ரகாரத்தில் உள்ள குடும்பம் ஒன்றில் வாழ்ந்த பெண்ணொருத்தி ராமானுஜர் மடத்தில் போய் சேர்ந்து சிஷ்யை ஆனாள். இவள் கொங்கு நாட்டினள் என்பதை அறிந்து இவளை கொங்கு பிராட்டி என்றார் ராமானுஜர். குரு பரம்பரை, ராமானுஜர் ஒரு அரசனுடைய கொடுமைக்கு உள்ளாகி திருவரங்கத்திலிருந்து கொங்கு நாட்டின் வழியாக சென்றபோது கொங்கு பிராட்டியுடன் தொடர்பு கொண்டு இருந்ததாக கூறுகிறது. வேடர் ராமானுஜருக்கு துணை புரிந்தார் என்று பரமத பங்கம் எனும் நூல் குறிப்பு எடுத்துக்காட்டி இருக்கின்றார். என்று எடுத்துக்காட்டுகிறார். (த. இரமணி, 1988) இதனைக் கொண்டு ராமானுஜர் காலத்தில் கொங்கு நாட்டில் வைணவத்தின் செல்வாக்கை உணர முடிகின்றது.

## கொங்கு நாட்டில் வைணவ திருத்தலங்கள்

ஈரோட்டில் உள்ள கஸ்தூரி ரங்கநாதர் ஆலயம், கோவையில் உள்ள காரமடை அரங்கநாத பெருமாள் ஆலயம், கோபியில் உள்ள விஜயமங்கலம் சித்ரமேலி விண்ணகரம், நாமக்கல் குடைவரைக் கோயில், சிங்காநல்லூர் உலகளந்த பெருமாள் செப்பு திருமேனி, கொடுமுடியில் உள்ள திருமால் கோயில் முதலியன கொங்கு நாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க வைணவ திருத்தலங்கள் ஆகும்.

## முடிவுரை

கொங்குப் பகுதியில் சிறுதெய்வ வழிபாடு முதல் பெருந்தெய்வ வழிபாடுவரை பல்வேறு சமயங்கள் செழித்து வளர்ந்துள்ளன. ஆட்சி மாற்றங்களாலும் கால மாற்றங்களாலும் சமயமாற்றங்கள் காலந்தோரும் நிகழ்ந்திருக்கின்றன. ஏனைய சமயங்களைக்காட்டிலும் சைவ சமயம் இப்பகுதியில் அதிக செல்வாக்குடன் காணப்படுவதை அறியமுடிகின்றது. இஸ்லாமிய படையெடுப்பினால் இங்கிருந்த கோயில்கள் பல அழிக்கப்பட்டு மசூதிகள் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. கிருத்துவ மதம்

**16ஆம் நூற்றாண்டில் பரவத் தொடங்கியிருக்கின்றது. பல்லவ மன்னர்கள் காலத்திலும் கங்க மன்னர்கள் காலத்திலும் கொங்கு நாட்டில் வைணவம் சிறப்புற்றிருக்கிறது**

## References

M. Ramachandran Chettiar, (1954) History of Kongu Country, Annamalai Polytechnic College, Annamalai Nagar, Chidambaram,

Puliyur Keshikan, (2010) Purananuru Moolamum Urayum, Saradha Press, Chennai.

R. Poongundran, (2005) Coimbatore District History Seminar Research Papers, Coimbatore District Religion,

Researcher C. Kathirvel, (1988) Sociological Perspective on Kongu Country Minor Deity Worship, Kongu Nationality, Bharathiar University, Coimbatore.

S. Krishnamacharya, (1988) Nalayira Divya Prabandham, Success Press, Chennai.

T. Ramani, (1988) Religious Status of Kongu Country, Kongu Nationality, Bharathiar University, Coimbatore.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2020. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License